P.L.RAJ IAS & IPS ACADEMY
Building Bureaucrats Since 2006

# August 13, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 543-ஆக நீடிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி, தொகுதி மறுசீரமைப்பு மசோதாவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.
   I. முதல்வர் ச.ஜோசப் விஜய் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்துக்கு திமுக, காங்கிரஸ், விசிக, ஐயூஎம்எல் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்தன. அதிமுக, பாஜக, பாமக, தேமுதிக ஆகிய கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.
   II. மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 543-ஆக தொடர வேண்டும்; பெண்களுக்கான 33 சதவீதஇட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை முதல்வர் ஜோசப் விஜய் முன்மொழிந்தார்.
   III. குரல் வாக்கெடுப்பு மூலம் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. வெளிநாட்டு நன்கொடை (ஒழுங்குமுறை) சட்டத் திருத்த (எஃப்சிஆர்ஏ) மசோதா, 31 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. இது தொடர்பான தீர்மானம், இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது.
   I. அரசு சாரா அமைப்புகள், அவற்றின் வெளிநாட்டு நன்கொடை மீதான அரசின் கண்காணிப்பை கடுமையாக்க வழிவகுக்கும் வெளிநாட்டு நன்கொடை (ஒழுங்குமுறை) சட்டத் திருத்த - மசோதா, மக்களவையில் கடந்த மார்ச் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது.
   II. ஒரு நிறுவனம் எஃப்சிஆர்ஏ உரிமத்தை இழக்க நேரிட்டால் அதன் சொத்துகளை நிர்வகிக்க பிரத்யேக ஆணையத்தை அமைக்க முன்மொழியும் இந்த மசோதாவின் பிரிவுகள், சிறுபான்மையினர் தொண்டு நிறுவனங்களுக்கு எதிராக உள்ளதாக எதிர்க் கட்சிகள் கடுமையாக குற்றஞ்சாட்டி வருகின்றன.
   III. நடப்பு மழைக்கால கூட்டத்தொடரில் இந்த மசோதாவை விவாதித்து நிறைவேற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியான நிலையில், எதிர்க்கட்சிகள் தங்களின் எதிர்ப்பை தீவிரப்படுத்தின.

IV. மக்களவை புதன்கிழமை காலையில் கூடியதும், அமளிக்கு இடையே வெளிநாட்டு நன்கொடை (ஒழுங்குமுறை) சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்பும் தீர்மானத்தை மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் கொண்டுவந்தார். எதிர்க்கட்சிகளின் அமளிக்கு இடையே குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

V. இத்தீர்மானத்தின்படி, மக்களவை எம்.பி.க்கள் 21 பேர், மாநி லங்களவை எம்.பி.க்கள் 10 பேர் என மொத்தம் 31 உறுப்பினர்களுடன் கூட்டுக் குழு அமைக்கப்படும். இந்த எம்.பி.க்களை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் ஆகியோர் பரிந்துரைப்பர்.

VI. எதிர்வரும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின் முதல் வாரத்தின் கடைசி நாளுக்குள் கூட்டுக் குழு தனது அறிக்கையை தாக்கல் செய்ய கோரப்பட்டுள்ளது.

3. தில்லியில் நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் பாதி எரிந்த நிலையில் கட்டுக்கட்டாக பணம் கண்டறியப்பட்ட சம்பவத்தில், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியுள்ளதாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

I. தில்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக யஷ்வந்த் வர்மா பணியாற்றியபோது, கடந்த 2025-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14-ஆம் தேதி இரவு அவரின் வீட்டில் தீ விபத்து ஏற்பட்டது. இதுகுறித்த தகவலின்பேரில் தீயணைப்புப் படையினர் சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது அவரின் வீட்டில் கட்டுக்கட்டாக ரூபாய் நோட்டுகள் எரிந்த நிலையில் கண்டறியப்பட்டது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதையடுத்து, அவர் தில்லி உயர்நீதிமன்றத்தில் இருந்து அலாகாபாத் உயர்நீதிமன்றத்துக்குர் பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

II. நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தசம்பவத்தை முன்வைத்து நீதிபதிகளுக்கு எதிராக கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, அலாகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவி நீக்குவதற்கான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் 200-க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையொப்பமிட்டு

கடந்த ஆண்டு ஜூலை மாதம் தாக்கல் செய்தனர். இதையடுத்து, நீதிபதி யஷ்வந்த் வர்மாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க மக்களவை தலைவர் ஓம் பிர்லா மூன்று நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக் குழுவை அமைத்தார்.

III. நாடாளுமன்றத்தில் பதவி நீக்க தீர்மானம் தாக்க லானதைத்தொடர்ந்து, நீதிபதி யஷ்வந்த் வர்மா தனது பதவியை ராஜிநாமா செய்தார். அதேநேரத்தில் அவரது ராஜிநாமா குறித்து சட்ட அமைச்சகம் அறிவிப்பு எதையும் இதுவரை வெளியிடவில்லை.

IV. எனினும், யஷ்வந்த் வர்மா மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரித்த மூன்று நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக் குழு தனது அறிக்கையை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவிடம் கடந்த மே மாதம் தாக்கல் செய்தது. அத்துடன் ஆவண அடிப்படையிலான ஆதாரம், வாய் மொழியில் பெறப்பட்ட வாக்குமூலங்களையும் அந்தக் குழு தாக்கல் செய்தது.

V. அந்த அறிக்கை,மாநிலங்களவை தலைமைச் செயலர் மற்றும் மக்களவை தலைமைச் செயலர் ஆகியோரிடம் தாக்கல் செய்யப்பட்டது.

VI. அந்த அறிக்கையில், நீதிபதி யஷ்வந்த்வர்மா மீதான கணக்கில் வராத பணம், ஆதாரத்தை சிதைத்தது, மழுப்பலான விளக்கம் ஆகிய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வீட்டில் கண்டறியப்பட்ட ரொக்கப் பணத்தின் இருப்பு, ஆதாரம், உரிமை குறித்து நீதிபதி யஷ்வந்த் வர்மா திருப்தி அளிக்கும் வகையில் விளக்கமளிக்க தவறிவிட்டதாகவும், அவரது பதில் தெளிவற்றதாக இருந்ததாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

VII. உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் பதவி விலகல் தொடர்பாக ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதில் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் தங்களது பதவிகளை ராஜிநாமா செய்வது தொடர்பாக குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதிவிட்டு, அதன் நகலை வெளியிட்டால் போதும்; அது ராஜிநாமாவாக கருதப்படும். அவரது பதவி விலகலை குடியரசுத் தலைவர் ஏற்க வேண்டும் என்பதில்லை எனக் கூறியுள்ளது. அதன்படி, யஷ்வந்த் வர்மா பதவி விலகிவிட்டதால், அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பதவிநீக்க தீர்மானத்தால் பயனில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

4. டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகு வதாக என்.சந்திரசேகரன் அறிவித்தார்.

5. ஆடவர் மற்றும் மகளிருக்கான 16-ஆவது உலகக் கோப்பை ஹாக்கி போட்டி, பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தில் வரும் 15-ஆம் தேதி முதல் நடைபெறவுள்ளது. இந்திய ஆடவர் அணியைப் பொருத்தவரை, முதல் போட்டியில் வெண்கலம் (1971), அடுத்த போட்டியில் வெள்ளி (1973) என முன்னேறி, 3-ஆவது போட்டியில் சாம்பியனாகி தங்கத்தை தட்டிச் சென்றது (1975). ஆனால், அதன் பிறகு தனது நிலையை தவறவிட்ட இந்திய ஆடவர் அணி, கடந்த 51 ஆண்டுகளாக மீண்டும் பதக்க மேடை ஏற முடியாமலேயே தடுமாறி வருகிறது. இடைப்பட்ட காலத்தில் ஒலிம்பிக், ஆசிய போட்டிகள், ஆசிய கோப்பை, சாம்பியன்ஸ் கோப்பை, ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை, புரோ லீக், ஹாக்கி உலக லீக், காமன்வெல்த் போட்டிகள் என சர்வதேச அளவில் ஏதேனும் ஒரு பதக்கத்தை வென்று முனைப்புடன் இருந்தாலும், உலகக் கோப்பை பதக்கம் மட்டும் இந்தியாவுக்கு எட்டர்க் கனியாகவே தொடர்கிறது.

6. பிரிட்டன் பிரதமர் ஆன்டி பர்ன்ஹாம், இந்திய வம்சாவளி உத்தி வகுப்பாளரான கௌதம் ரங்கராஜனை தனது அரசில் நிபுணத்துவ ஆலோசகராக நியமித்துள்ளார்.
   I. பிரிட்டன் பிரதமராகவும், தொழிலாளர் கட்சியின் தலைவராகவும் பர்ன்ஹாம் கடந்த மாதம் பொறுப்பேற்றார். இதையடுத்து தனது அரசின் திட்டத்தை அமல்படுத்தும் வகையில் பல்வேறு மாற்றங்களைச் செய்து வருகிறார். அதில் ஒன்றாக, கௌதம் ரங்கரா ஜனை புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பதவியான கட்டமைப்பு மற்றும் செயல்முறையின் நிபுணத்துவ ஆலோசகராக பர்ன்ஹாம் நியமித்துள்ளார்.
   II. கௌதம் ரங்கராஜன், பிபிசி தொலைக்காட்சியின் முன்னாள் உத்தி வகுப்பாளரும், இசைக் கலைஞரும் ஆவார்.
   III. பெருநிறுவன உத்தி வகுப்பிலும், நிறுவன மாற்றங்களைச் செயல் படுத்துவதிலும் கௌதம் ரங்கரா ஜன் குறிப்பிடத்தக்க அனுபவம் கொண்டுள்ளார் என்றும், அவர் இந்த வாரமே தனது பொறுப்பை ஏற்பார் என்றும் பிரிட்டன் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.